பக்கங்கள்: 06
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 01 புதன் கிழமை 14.04.2021 கதிர் 28

# பலாலி வீதியில் எழுந்தருளிய திடீர் சிவன்!



யாழ்ப்பாணம்,ஏப்.14

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் பழம்வீதி ஆரம்பிக்கும் 'கெற்றப்போல்' சந்தியில் இரவோடு இரவாக எந்தவொரு அனுமதியும் இன்றி சிவன் சிலை வைக்கப்பட்டுள்ளது.



இடிக்கப்பட்ட நினைவுத் தூபி

வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மாநகர சபை ஆகியோருக்கு சொந்தமான வீதியின் நடுவே குறித்த சிவன் சிலை இரவோடு இரவாக சில இளைஞர்களால் வைக்கப்பட்டது.

இதே இடத்தில் 1989-04-14

2

# அரச கூட்டுக்குள் மோதல் உக்கிரம்

## ஒப்புக்கொண்டார் அமைச்சர் மஹிந்தானந்த



அரச கூட்டணிக்குள் கருத்து மோதல் உச்சத்தில் இருப்பது உண்மைதான். மாகாண சபைத் தேர்தலை முறைமைதொடர்பில்ஸ்ரீலங்காபொதுஜனமுன்னணி முன்வைத்த திட்டத்துக்கு பங்காளிக் கட்சிகள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. எனவே, எதிர்வரும் 19 ஆம் திகதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் சந்திப்பொன்று நடைபெறவுள்ளது. அதன்பின்னர் சுமுக நிலை உருவாகும்.

2

# 11 கடும்போக்கு இஸ்லாமிய அமைப்புகள் தடை: வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்ட கோட்டா



இலங்கையில் 11 கடும்போக்கு இஸ்லாமியவாத அமைப்புகளைத் தடை செய்து, வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

இதன்படி, தீவிரவாத நடவடிக்கைகளுடன்தொடர்புடைய 11 அமைப்புகள் தடை

2

# சைக்கிளில் சென்ற சிறுவன் பட்டா மோதியதில் உயிரிழப்பு

## சகோதரன் படுகாயம்; யாழ் நகரில் சம்பவம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.14

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் சைக்கிளில் சென்ற சிறுவர்களை பட்டா ஒன்று மோதியதில் ஒரு சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்தான்.

இந்தச் சம்பவத்தில் நாவலர் வீதியைச் சேர்ந்த ஜெயரூபன் மதுசிகன் (வயது 8) என்னும் சிறுவனே பரிதாபகரமாக உயிரிழந்தான். 12 வயதுச் சகோதரன் படுகாயமடைந்த நிலையில்

2

# மேலும் பத்தாயிரம் கைதிகள் விரைவில் விடுதலையாவராம்

கொழும்பு,ஏப்.14

போதைப்பொருள் விவகாரத்துடன் தொடர்புடைய எண்ணாயிரம்இராசாயனப் பகுப்பாய்வு நிறைவடைந்துள்ளதாக நீதி அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் கடந்த 9 மாத காலப்பகுதியில் அரச இராசாயனபகுப்பாய்வுதிணைக்களத்தில் குறித்த அறிக்கைகள் கையளிக்கப்பட்டிருந்தன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அரச இராசயன பகுப்பாய்வு அறிக்கை நிறைவடைந்துள்ளதன் காரணமாக நிலுவையில் காணப்படும் வழக்குகளை இதனூடாக நிறைவு

2

# சிறுவன் இயக்கிய மோ.சைக்கிள் மோதி 2 வயதுச் சகோதரி சாவு!

## மட்டுவிலில் வருடம் பிறந்ததும் பரிதாபம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.14

புதுவருடத் தினமான இன்று காலைசாவகச்சேரி மட்டுவில் பகுதியில் 8 வயதுச் சிறுவன் ஒருவன் இயக்கிய மோட்டார் சைக்கிள் மோதி 2 வயதுச் சிறுமி பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த த.தஸ்விகா (வயது 2) என்னும் சிறுமியே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

மட்டுவில் துர்க்கை அம்மன் கோவிலடியில் தந்தையார் வீட்டில் இருந்து கடைக்குச் சென்று திரும்பிய

2




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11 கடும்போக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளன என்று வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இந்த அமைப்புகள் தடை செய்யப்பட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமையவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட அமைப்புகளுக்கு தலைமைத்துவம் வழங்குவது, உறுப்பினராக இருப்பது, அமைப்புடன் தொடர்புடைய உடை - சின்னங்களை அணிவது, கூட்டங்களை நடத்துவது, ஊக்குவிப்பது, தகவல்களை வெளியிடுவது போன்ற நடவடிக்கைகள் தண்டனைக்குரிய குற்றமாகும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய தௌஹீத் ஜமாஅத், சிலோன் தௌஹீத் இமாஅத், ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமாஅத், அகில இலங்கை தௌஹீத் ஜமா அத், ஜம்இய்யதுல் அன்சாரி சுன்னத்துல் மொஹம்மதியா, தாருல் அதர் அல்லது ஜாமிஉல் அதர், ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம், ஐ.எஸ்.ஐ.எஸ்., அல்கைதா, சேவ் த பேர்ல்ஸ், சுபர் முஸ்லிம் ஆகிய இஸ்லாமிய அமைப்புகளே இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ளன.

## பலாலி வீதியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அன்று உயிரிழந்த விடுதலைப் புலிகளின் ஞாபகார்த்தமாக ஒரு தூபி இருந்தது. வீதி அகலிப்பு நேரம் போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதாக தெரிவித்து வீதி அதிகார சபை பணியாளர்களால் அந்தத் தூபி இடித்து அகற்றப்பட்டிருந்தது..

இதே இடத்தில், இதே திகதியில் 2021-04-14 இன்று சில இளைஞர்களால் சிவன் சிலை வைக்கப்பட்டுள்ளது.

இதேபோல, பலாலி வீதி - அரசடி வீதி (கந்தர்மடம்) சந்தியில் அண்மையில் இதேபோல பிள்ளையார் சிலை ஒன்று திடீரென முளைத்ததும், சில தினங்கள் கழித்து அதற்கு மேலாக தகர மறைப்பு அமைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கவை.

## சிறுவன் இயக்கிய......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் கடையில் கொள்வனவு செய்த பொருளை வீட்டில் வைத்து விட்டு உடன் திரும்பும் நோக்கில் மோட்டார் சைக்கிள் இயங்கு நிலையில் நிறுத்தியுள்ளார். இதனை அவதானித்த 8 வயதுச் சிறுவன் மோட்டார் சைக்கிள் முறுக்கியுள்ளான்.

இதன்போது அருகில் விளையாடிக் கொண்டிருந்த சகோதரியான சிறுமியை மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது. குறித்த சம்பவத்தில் உயிரிழந்த சிறுமியின் உடல் சவகச்சேரி பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சைக்கிளில் சென்ற......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளாண்.

புதுவருட தினத்தில் இரு சிறுவன்களும் பெண்களிற்கான சைக்கிளில் வீதியில் சென்று கொண்டிருந்த சமயம் வேகமாகச் சென்ற டிப்பரில் அகப்பட்டு படுகாயமடைந்துள்ளனர்.

இரு சிறுவர்களும் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோதும் மதுசிகன் சிகிச்சை பலனின்றி பரிதாபகரமாக உயிரிழந்தான். இதேநேரம் சகோதரன் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றான்.

விபத்து தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிசார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## அரச கூட்டுக்குள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

அரச கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள மோதல் நிலை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரச கூட்டணியில் பல கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. ஒவ்வொரு கட்சிக்கும் கொள்கைகள் இருக்கின்றன. எனவே, கொள்கை ரீதியான முரண்பாடொன்றே தற்போது ஏற்பட்டுள்ளது. அதுவும் குறிப்பாக மாகாண சபைத் தேர்தலை மையப்படுத்தியே அந்தப் பிரச்சினை எழுந்துள்ளது.

70 இற்கும் 30 என்ற அடிப்படையில் தேர்தலை நடத்துவதற்கான திட்டம் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியால் முன்வைக்கப்பட்டுள்ளது. ஒரு தொகுதியில் ஒரு கட்சி மூவரை நிறுத்தலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த யோசனைக்கே பங்காளிக் கட்சிகள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. இது தொடர்பில் பேச்சு நடத்தி இணக்கப்பாடொன்றுக்கு வரமுடியும் என நம்புகின்றோம். பிரதமர் தலைமையில் 19 ஆம் திகதி நடைபெறும் சந்திப்பில் இணக்கப்பாடு எட்டப்படலாம்.

மாகாண சபைகளுக்கான தேர்தல் நிச்சயம் நடத்தப்படும். ஒன்றாக இணைந்தே மே தினம் அனுஷ்டிக்கப்படும். பங்காளிக் கட்சிகள் தனியாக நிகழ்வுகளை நடத்தமாட்டா. கருத்து மோதல் பேச்சு மூலம் தீர்க் கப்படும். கூட்டணியாக முன்னோக்கி பயணிப்போம் - என்றார்.

## மேலும் பத்தாயிரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யமுடியும் எனவும் நீதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன்காரணமாக தடுப்புக்காவலில உள்ள சுமார் 10 ஆயிரம் கைதிகள் விடுவிக்கப்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாகவும் சுட்டிக்காட் டியுள்ளது.

இந்த நிலையில் தற்போது நாளாந்தம் ஆயிரத்து 500 அறிக்கைகள் வெளியிடப்படுவதாகவும் நீதி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

**கடை வாடகைக்கு தேவை**

யாழ்ப்பாணம் K.K.S.வீதியில் யாழ். இந்து கல்லூரி தொடக்கம் மருதனார் மடம் வரையான எல்லைக்குள் கடை ஒன்று வாடகைக்கு உடன் தேவை.

தொடர்புகளுக்கு - 0774135036

**அவுஸ்திரேலியாவில் நிரந்தரமாக வசிப்பதற்கான வாய்ப்பை பெற கீழ் காணும் தகமைகளுடன் விண்ணப்பிக்கவும்**

**MIGRATE TO AUSTRALIA**

**Degree Holders:**
Engineers
IT Professionals
Agricultural Professionals
Architects
Quantity Surveyors
Land Surveyors
Social Workers
Nurses

**Diploma Holders: (HNDE, NDT, NDES)**
Civil Engineering Associates
Mechanical Engineering Associates
Telecommunications Engineering Associates
Electrical Engineering Associates
Maintenance Planners

**NVQ IV Holders: (CGTTI, AETI, NAITA, ATI)**
Motor Mechanics
A/C Mechanics
Electricians
Auto Electricians
Fitters
Welders
Machinists

**Requirements:**
- ☆ Age below 45
- ☆ Qualifications (Degree / Diploma / Certificate – NVQ III & IV)
- ☆ Work experience in the relevant field
- ☆ IELTS (6 in each) or PTE (50 in each)

**CALL FOR FREE CONSULTATION:**
- Partner Migration Visa
- Parents Visa
- Business Visa
- Visitors Visa

**தொடர்புகளுக்கு:-**

**HOTLINE: 0766228891**

**Australian Migration Consultants**
41, George R De Silva Mw, Colombo 13
0112437285, Email: sl.austvisa@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நமது பார்வை**

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நாட்டுக்குள் நாடு சீனாவுக்கு!

குழப்பங்களின் தளம்தான் இலங்கை என்றாகிவிட்டது. முரண்பாடுகளின் மையம்தான் கொழும்பு ஆட்சிப் பீடம் என்று சொல்லுமளவுக்கு உள்குத்துகள், கருத்து வேறுபாடுகள் உச்சத்தை எட்டியுள்ளன.

சிறுபான்மையினரின் காலாதி கால வழக்காறுகளைப் பேணும் நடைமுறையை வல்வந்தமாக ஒழித்து, அவர்களின் தனித்துவத்தைச் சிதைத்தழித்து, அடிமைப்பட்ட இனங்கள் என முத்திரை குத்தி உணர்த்துவது பேரினவாதத்தின் கொடூர இலக்கு.

பல்வேறு வழவங்களில் அந்தக் கொடூரம் இலங்கையில் அரங்கேறி வருகின்றது.

இலங்கையின் வடக்குத் தமிழ் மக்களின் வழக்காறின் அடிப்படையில் எழுந்த தேச வழமைச் சட்டம் பல நூற்றாண்டு காலமாக இங்குநடைமுறையில் உள்ளது.

அது போலவே இஸ்லாமியர்களுக்கு இந்த நாட்டில் முஸ்லிம் சட்டம் உள்ளது.

சிறுபான்மை இனப் பிரிவினர்களின் வழக்காறுகள், பண்பியல்புகள், பழக்க வழக்கங்கள், நடைமுறைகள் என்பவற்றை உள்ளடக்கியதாக இந்தச் சட்டங்கள் அவரவர் பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்தந்த இன மக்களுக்குரிய விசேட நடைமுறைகள் இலங்கை நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுவது பௌத்த – சிங்கள பேரினவாதத்தின் கண்களை உறுத்துகின்றது. அதை சகித்துக்கொள்ள முடியாமல் துடியாய்த் துடிக்கின்றது பேரினவாத வெறி.

இந்த நாட்டில் சிறுபான்மையினரின் தனித்துவங்களுக்கு இடமளிப்பது அவர்களுக்கான அங்கீகாரம் என்று பொங்கி எழுந்து கொதித்து நிற்கும் பேரினவாத மேலாண்மை, அதனால் அந்தந்தத் தனித்துவச் சட்டங்களை நடைமுறையில் இருந்து நீக்கவேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்கின்றது.

பௌத்த – சிங்களப் பேரினவாத அதிகாரத்தின் குறியீடாக எழுந்து நிற்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 'ஒரே நாடு; ஒரே சட்டம்' என்ற தமது கண்டுபிடிப்பு மூலம் அறிவிக்கும் கோட்பாடு இதுதான்.

நாட்டில் உள்ள அனைவருக்கும் ஒரே மாதிரியான சட்டம்தான், வித்தியாசமாக சட்டங்களை நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று அறிவிப்பதன் மூலம், வடக்கு தமிழருக்கான விசேட ஒழுங்கான தேச வழமைச் சட்டத்தையும், இஸ்லாமியர்களுக்கான முஸ்லிம் சட்டத்தையும் நடைமுறையில் இருந்து ஒழிப்பதுதான் கோட்டாபய குழாமின் ஒரே திட்டம்; இலக்கு.

சிறுபான்மையினருக்காக நூற்றாண்டு கடந்து நடைமுறைப்படுத்தப்படும் விசேட சட்டங்களை – வழக்காறுகளை – நாட்டில் ஒரே விதமான சட்ட நடைமுறையாக்கம் மட்டுமே இருக்கும் என்று கூறி நடைமுறைப்படுத்தலில் இருந்த விலக்கத் துடிக்கும் கோட்டா ஆட்சிப் பீடம், நாட்டில் பிறிதொரு தரப்புக்கு மட்டும் புதிதாக விசேட சட்டத்தை – பல்வேறு சலுகைகளுடன் – கொண்டுவர முயல்கின்றது.

அதனால்தான் இலங்கையை முரண்பாடுகளின் முழுமையான மையம் என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டோம்.

இலங்கையின் பூகோள அமைப்பை மாற்றி, தலைநகர் கொழும்பை அண்டிய கடற்பிரதேசத்தை மண்ணை நிரப்பித் தரையாக்கி, புதிய நகரம் ஒன்றை உருவாக்கிய ராஜபக்ஷக்கள் அந்தக் கொழும்புத் துறைமுக நகருக்கு என விசேட சட்டங்களை யாக்க எத்தனித்திருக்கின்றார்கள்.

கொழும்புதுறைமுகப்பொருளாதார ஆணைக் குழுவுக்கான சட்டவரைவின்படி அந்தப் பிரதேசத்தில் இலங்கையின் சாதாரண சட்ட விதிமுறைகள் பல செல்லுபடியாகமாட்டா.

முழு நாட்டையுமே சீனாவிடம் அடமானம் வைத்துள்ள ராஜபக்ஷக்கள் தமது சீன எஜமானர்களின் விருப்பையும், இலங்கையில் அவர்களின் இலக்கையும், இங்கு அவர்களின் போக்கையும் கணித்து, அதற்கேற்ப இந்தச் சட்டவரைவை முன்வைக்கின்றார்கள் என்று விடயமறிந்த தரப்புகள் வெளிப்படையாகக் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றன.

இலங்கையின் பொருளாதாரக் கொள்கைக் கோட்பாடுகளுக்கு முற்றிலும் முரண்பாடான முறையில் – நாட்டின் வழமையாக சட்டங்களுக்குப் புறம்பான வகையில் – சிறப்பு அதிகாரங்களுடன் இந்த ஆணைக்குழு சட்ட ரீதியாக அமைக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

நாட்டின் ஐக்கியத்தை உறுதிப்படுத்தும் விதத்தில் சமஷ்டி முறையை நடைமுறைப்படுத்த முயன்றால் அது 'பிரிவினைவாதம்' என்று குசும்புத்தனமாக விளக்கம் கூறும் பௌத்த, சிங்களப் பேரினவாதம், இப்போது சீன எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்யும் விதத்தில் நாட்டுக்குள் தனி அதிகாரம் கொண்ட பிறிதொரு நாட்டை உருவாக்கும் சீரழிவுக்குத் துணைபோவது விந்தைதான்!

# இயக்கச்சியில் பற்றைக்குள் கைவிடப்பட்ட நிலையில் கார்

## தொடர்கின்றது மர்மம்



கிளிநொச்சி மாவட்டம் இயக்கச்சிக்கு அண்மித்த பகுதியில் பற்றை ஒன்றுக்குள் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்ற கார் தொடர்பில் படைத்தரப்பு மற்றும் பொலிஸாரால் தீவிர விசாரணை முன்னெடுக்கப்பட்டுவருவதாக தெரியவருகிறது.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது;-

ஏ-09 நெடுஞ்சாலையில் இயக்கச்சிக்கும் ஆனையிறவுக்கும் இடைப்பட்ட பகுதியில் இயக்கச்சிக்கு அண்மித்த பகுதியில் உள்ள பற்றைக்காடு ஒன்றினுள் கார் ஒன்று அநாதரவாக நிற்பது தொடர்பில் படைத்தரப்புக்கு தகவல் கிடைத்திருக்கின்றது.

குறித்த காரில் யாரும் இல்லாத நிலையில், அது அங்கே எப்போது கொண்டுவரப்பட்டது? அது யாருக்குச் சொந்தமானது? அசம்பாவிதம் எதாவது மேற்கொள்ளப்படப்போகிறதா? – போன்ற பல கோண விசாரணைகள் படைத்தரப்பு மற்றும் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

அந்தக் காரை ஒளிப்படம் எடுக்கவோ, அந்தப் பகுதிக்குச் சென்று பார்வையிடவோ ஊடகவியலாளர்களுக்கு நேற்று அனுமதி வழங்கப்படவில்லை.

விசாரணைகளின் முடிவிலேயே குறித்த விடயம் தொடர்பில் தகவல் தரப்படும் என்று பொலிஸ் தரப்பு தெரிவித்திருந்தது.

இந்நிலையில் இன்று காலை விசேட அதிரடிப்படையின் உதவியுடன் காரின் கதவுகள் திறக்கப்பட்டு பரிசோதனையிடப்பட்டது. காரின் பல பாகங்கள் திருட்டு போயுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இது தென்னிலங்கையில் திருட்டுப் போன காராக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இது வரையில் எவரும் இது தொடர்பாகக் கைது செய்யப்படவில்லை. மேலதிக விசாரனைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ராஜபக்ஷவினர் ஹிட்லராக மாறமாட்டார்கள் ஹிட்லருக்கு எதிராகத்தான் செயற்பட்டனர்!

## வக்காளத்து வாங்குகின்றார் முருத்தெட்டுவ தேரர்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒருபோதும் ஹிட்லர் போன்று மாறுவாரென்று நான் நினைக்கவில்லை. ராஜபக்ஷவினர் ஹிட்லருக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் என்று முருந்தெட்டுவ ஆனந்த தேரர் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம வெளியிட்ட கருத்து தொடர்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர்கள் பிரபலமடைவதற்காக இவ்வாறு கூறுகின்றார்களா என்பது தெரியவில்லை. அப்படிக் கூறுகின்றமையை உண்மையில் நாம் கண்டிக்கிறோம்.

69 இலட்சம் வாக்குகளும் இதற்காகவே கிடைத்தன என எவரும் பொய் சொல்ல முடியாது. இந்த வாக்குகள் என்னாலேயே கிடைத்தது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வாயைத் திறந்து கூறலாம், அவர் மீதான நம்பிக்கையினால் தான் 69 இலட்சம் வாக்குகள் கிடைத்தன.

மேலதிகமாக 5 லட்சம் வாக்குகள் கிடைத்தன. அந்த 5 லட்சம் வாக்குகள் தற்போது இழக்கப்பட்டுள்ளன. ஹிட்லராக மாறவே மக்கள் வாக்களித்தனர். என எவராவது கூறினால் அவர்களுக்கு எமது மக்கள் தகுந்த பதிலளிப்பர். – என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# அதிவேக நெடுஞ்சாலையில் அடுத்தடுத்து 8 விபத்துக்கள்

## அதனால் கடும் போக்குவரத்து நெரிசல்





தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் தொடங்கொட மற்றும் கௌனிகம பகுதிகளுக்கு இடையில் கடும் போக்குவரத்து நெரிசல் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதப் பகுதியில் அடுத்தடுத்து 8 விபத்துக்கள் ஏற்பட்டதன் காரணமாக இவ்வாறு போக்குவரத்து நெரிசல் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வாகனங்களின் வேகத்தை குறைத்து வாகனங்களுக்கு இடையிலான இடைவெளியைக் கடைபிடித்து பயணிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஒரே நாளில் 421 இராணுவ வீரர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது!



கொரோனாவின் இரண்டாவது அலை இந்தியாவில் வேகம் காட்டி வருகிறநிலையில் இராணுவப் பிரிவினர் பலருக்கும் கொரோனா பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறான பரிசோதனைகளில், நேற்று ஒரே நாளில் துணை இராணுவ படைப் பிரிவுகளைச் சேர்ந்த 421 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யபப்பட்டுள்ளது.

பி.எஸ்.எப். இராணுவப் பிரிவினரில் 311 பேருக்கும் சி.ஐ.எஸ்.எப் படைப்பிரிவினரரில் 43 பேருக்கும் புதிதாக கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சி.ஆர்.பி.எப். பிரிவில் 28 பேருக்கு புதிதாக தொற்று உறுதியாகி இருக்கிறது.

மொத்தத்தில் துணை இராணுவத்தினரில் இதுவரை 55 ஆயிரத்து 929 பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டதாகவும், 53 ஆயிரத்து 514 பேர் சிகிச்சைக்குப் பின் குணமடைந்துவிட்டதாகவும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கொரோனாவுக்கு இதுவரை 208 இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் முழு ஊரடங்கு வேண்டாமெனில் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள்

## கர்நாடக சுகாதார அமைச்சர் அறிவுரை!



கர்நாடகத்தில் கொரோனா பரவலின் இரண்டாவது அலை தீவிரமாக உள்ளதனால் பெங்களூரு உட்பட 8 நகரங்களில் இரவு நேர ஊரடங்கு அமல்படுத்தப் பட்டுள்ளது.

அரசின் தடுப்பு நடவடிக்கைகள் பற்றிய ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த கர்நாடக சுகாதாரத்துறை அமைச்சர் சுதாகர், 'கொரோனாவைத் தடுக்க அரசு வெளியிட்டுள்ள விதிமுறைகளை பொதுமக்கள் தவறாமல் பின்பற்ற வேண்டும். அரசின் நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். முழு ஊரடங்கை மீண்டும் அமல்படுத்துவது குறித்து அரசு இன்னும் முடிவு எடுக்கவில்லை.

மக்களின் பொருளாதாரம் மோசமான நிலைக்குச் செல்லக்கூடாது என்றால் கொரோனாத் தடுப்பு வழிகாட்டுதலை அனைவரும் தீவிரமாகப் பின்பற்ற வேண்டும். ஊரடங்கை அமல்படுத்துகிறோம் என்று நானோ அல்லது முதலமைச்சரோ இதுவரை எங்கும் கூறவில்லை. நமக்கு எதற்கு ஊரடங்கு என்பது குறித்து மக்கள் சிந்திக்க வேண்டும்.

நமக்கு நாமே ஊரடங்கை விதித்துக் கொண்டால் யாருக்கும் எந்தப் பிரச்சினையும் இருக்காது. கொரோனா இரண்டாவது அலை அபாயகரமான முறையில் பரவி வருகிறது. எங்களின் எதிர்பார்ப்பையும் மீறி, பாதிப்பு அதிகமாக இருக்கிறது. அதனால் பொதுமக்கள் யுகாதி பண்டிகையை வீடுகளுக்குள் மட்டும் கொண்டாட வேண்டும். வெளியில் அதிகமாக நடமாடுவதைத் தவிர்க்க வேண்டும்.

முகக்கவசம் அணிய வேண்டும். சமூக இடைவெளியைத் தவறாமல் பின்பற்ற வேண்டும். சமூக இடைவெளியே பின்பற்றாமல் இருந்தால் அரசு என்ன செய்யமுடியும்? தயவு செய்து ஒரு இடத் தில் கும்பலாக சேர வேண்டாம். தேவையின்றி வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம். முழு ஊர டங்கு வேண்டாம் என்றால் கொரோனா தடுப்பு விதிமுறைகளை தீவிரமாக பின்பற்ற வேண்டும். இவற்றை கடைப்பிடிக்குமாறு மக்களிடம் வேண்டுகிறேன்.

வார இறுதி நாள்களில் ஊரடங்கை அமல்படுத்துவது குறித்து நாங்கள் ஆலோசிக்கவில்லை. மராட்டிய நிலை கர்நாடகத்திற்கு வரக்கூடாது என்றால் விதிமுறைகளைப் பின்பற்றுங்கள். அனைத்தும் மக்களின் கைகளில்தான் உள்ளன.

பெங்களூருவில் உள்ள தனியார் மருத்துவமனைகள் ஒரு வாரத்திற்குள் 50 சதவீத படுக்கைகளை அரசுக்கு ஒப்படைக்க ஒப்புக்கொண்டுள்ளன. கடந்த முறையும் பாதி படுக்கைகளை கொடுத்தனர். இப்போதும் அவர்கள் ஒப்புக்கொண்டது நல்ல விடயம். அரசு மருத்துவமனைகளில் கொரோனா நோயாளிகளுக்கு வழங்கப்படும் ரெம்டிசிவர் மருந்து கையிருப்பில் உள்ளது.

ஒக்சிஜன், ரெம்டிசிவர் மருந்து போன்றவற்றுக்குப் பற்றாக்குறை ஏற்படாமல் பார்த்துக்கொள்ளப்படும். இதற்கு தேவையான முன்எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கொரோனா நோயாளிகளுக்காக தற்காலிக மருத்துவமனைகள் தொடங்க அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கொரோனா தடுப்பு நிபுணர் குழு அரசுக்கு அறிக்கை வழங்கும். முதலமைச்சர் எடியூரப்பா பெங்களூரு திரும்பியதும் அந்த அறிக்கையில் உள்ள அம்சங்கள் குறித்து ஆலோசித்து அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்கள் கடந்த ஒரு ஆண்டாக கஷ்டப்பட்டு வாழ்க்கையை கட்டமைத்துக் கொண்டுள்ளனர். மீண்டும் அவர்களுக்கு கஷ்டத்தை கொடுக்க தனிப்பட்ட முறையில் நான் விரும்பவில்லை. ஊரடங்கு வேண்டவே வேண்டாம் என்றால் விதிமுறைகளைப் பின்பற்றுங்கள். எத்தனை ஆண்டுகளுக்கு இவ்வாறு ஊரடங்கை அமல்படுத்திக் கொண்டு செல்ல முடியும்? அனைவரும் தங்களுக்குரிய பொறுப்புகளை அறிந்து செயல்பட்டால் ஊரடங்கு குறித்த கேள்வியே எழாது' என குறிப்பிட்டுள்ளார்.

# ரேஷன் அட்டைதாரருக்கான மண்ணெண்ணை குறைப்பு

## தமிழக அரசு தகவல்

தமிழகத்தில் முதலில் ஒரு ரேஷன் அட்டைக்கு 2 லீட்டர் மண்ணெண்ணை வழங்கப் பட்டு வந்து, பின்னர் அந்த அளவு குறைக்கப்பட்டது. இந்நிலையில் மத்திய அரசு தற்போது தமிழகத்திற்கு 20 சதவீதம் மட்டுமே மண்ணெண்ணை ஒதுக்கீடு செய்துள்ளதாக உணவுப் பொருள் வழங்கல் துறை அறிவித்துள்ளது.

இது குறித்து உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பில் அனைத்து மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. அந்தச் சுற்றறிக்கையில்,

'மத்திய அரசால் தமிழகத்திற்கு வழங்கப்படும் பொது விநியோகத்திட்ட மண்ணெண்ணை அளவு படிப்படியாகக் குறைக்கப்பட்டுவருகிறது. தற்போது மாநிலத்தின் மொத்தத் தேவையில் 20 சதவீதம் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மத்திய அரசால் மாநிலத்திற்கு வழங்கப்படும் மண்ணெண்ணை ஒதுக்கீடு அளவின்படி அனைத்து மாவட்டங்களுக்கும் பங்கீடு செய்யப்படுகிறது.


எனவே மண்ணெண்ணை வழங்கல் அளவு குறித்து ரேஷன் அட்டைதாரர்களிடம் இருந்து புகார்கள் பெறப்படுவதைத் தவிர்ப்பதற்காக, மாவட்ட ஒதுக்கீட்டின் அடிப்படையில் மண்ணெண்ணை பெற தகுதியான ரேன் அட்டைதாரர்களுக்கு வழங்கல் அளவு குறித்து அனைத்து ரேன் கடைகள் மற்றும் மண்ணெண்ணை வழங்கும் நிலையங்களிலும் ரேஷன் அட்டைதாரர்கள் அறியும்வகையில் விளம்பரம் செய்ய வேண்டும்' என்று கூறப்பட்டுள்ளது.

# பிரதமர் நரேந்திர மோடி டுவிட்டரில் புத்தாண்டு வாழ்த்து

சித்திரைப் புத்தாண்டு இன்று கொண்டாடப்படுவதையொட்டி, ஆளுனர் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். பிரதமர் மோடியும் தனது வாழ்த்துகளைப் பகிர்ந்துள்ளார்.

அவர் தனது டுவிட்டர் பதிவில், 'தமிழகத்து சகோதர, சகோதரிகளுக்கும் உலகெங்கும் உள்ள தமிழர்களுக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள். தமிழ்ப் பண்பாட்டின் மகத்துவம் தொடர்ந்து ஒளிரட்டும். ஒவ்வொருவரின் வாழ்விலும், ஆரோக்கியத்தையும் செல்வத்தையும் மகிழ்ச்சியையும் நிறைக்க இந்நாளில் பிரார்த்திக்கிறேன்' என்று குறிப்பிட்டுள்ளா.

# மதுரை சித்திரைத் திருவிழா நாளை ஆரம்பமாகிறது குறித்த நேரங்களில் மட்டும் பக்தர்களுக்கு அனுமதி



மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் சித்திரைத் திருவிழா உலகப்புகழ் பெற்றது. இந்தத் திருவிழாவைக் காண உள்ளூர் மட்டுமின்றி வெளியூர் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் பக்தர்கள் பெருமளவில் மதுரைக்கு வருவர். ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதம் 12 நாள்கள் இந்தத் திருவிழா நடைபெறும்.

கடந்தாண்டு மார்ச் மாத இறுதியில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவியதால் தமிழக அரசு 144 ஆம் விதிப்படி பொது நிகழ்வுகளுக்குத் தடை விதித்தது. இதனால் ஏப்ரல் மாத இறுதியில் நடைபெறவிருந்த சித்திரைத் திருவிழா நிறுத்தப்பட்டு, பூசைகளும் கோவிலுக்குள் மட்டுப்படுத்தப்பட்டன. வெளிப் பக்தர்கள் அனுமதிக்கப்படாது திருக்கல்யாண சம்பிரதாயங்கள் மட்டும் சுவாமி சன்னதியில் உள்ள சேத்தி மண்டபத்தில் சிவாச்சாரியார்களால் நடத்தி வைக்கப்பட்டன.

இந்தாண்டு சித்திரைத் திருவிழாவைச் சிறப்பாக நடத்த கோவில் நிர்வாகம் கடந்த மாதத்தில் இருந்தே ஏற்பாடுகளைச் செய்து வந்த நிலையில் கொரோனா பரவலின் இரண்டாம் அலை காரணமாக கோவில்களில் திருவிழாக்கள் நடத்த தடை விதிப்பதாக அரசு அறிவித்தது. எனவே, மதுரையில் சித்திரைத் திருவிழா நடைபெறுமா? என்ற கேள்வி எழுந்தது. இது தொடர்பாக கோவில் தக்கார் கருமுத்துகண்ணன் மற்றும் பல்வேறு தரப்பினர் அரசிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதைத் தொடர்ந்து மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சித்திரைத்திருவிழாவை பக்தர்களின்றி கோவில் வளாகத்திற்குள் நடத்த அரசு அனுமதி அளித்துள்ளது. எனவே, இந்தாண்டு சித்திரைத் திருவிழா நாளை கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

இதையொட்டி நாளை காலை 10.35 முதல் 10.59 க்குள் சுவாமி சன்னதியில் உள்ள கொடிமரத்தில் கொடியேற்றம் நடைபெறவிருக்கிறது. கொடியேற்றம் மற்றும் விழா நிகழ்ச்சிகளை நேரடியாகக் காண பக்தர்களுக்கு அனுமதி வழங்க இயலாதிருப்பதாக ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

விழாவில் முக்கிய நிகழ்ச்சிகளான மீனாட்சி அம்மன் பட்டாபிஷேஷம் வருகிற 22 ஆம் திகதி இரவு 7.05 முதல் 7.29 வரையும், மீனாட்சி திருக்கல்யாணம் 24 ஆம் திகதி காலை 8.35 முதல் 8.59 வரையும் நடைபெறவுள்ளன.

திருவிழா நிகழ்ச்சிகள் அனைத்தும் கோவில் வளாகத்திற்குள் பக்தர்களின்றி உள் திருவிழாவாக நடைபெறவுள்ளன என்றும், திருவிழா நடைபெறும் 12 நாள்களும் இறைவனும் இறைவியும் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி வீதிகளில் காலை, இரவு நேரங்களில் வலம் வரும் நேரத்தில் மட்டும் பக்தர்கள் யாரும் கோவிலுக்குள் தரிசனம் பெற அனுமதி வழங்கப்படாது என்றும், அதே நேரத்தில் வழக்கம் போல் தினமும் காலை மற்றும் மாலையில் கோவில் நிர்வாகம் அறிவித்த நேரத்தில் பக்தர்கள் வழிபாடு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் ஆலயத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.04.2021இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல். 2021 மும்பைக்கு முதல் வெற்றி



ஐ.பி.எல். 2021 தொடரின் ஐந்தாவது லீக் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி 10 ஓட்டங்களால் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியை வென்றது.

சென்னையில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட மும்பை இந்தியன்ஸ் அணி, 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. சூர்ய குமார் யாதவ் 56 ஓட்டங்களையும் ரோஹித் ஷர்மா 43 ஓட்டங்களையும் எடுத்தனர்.

கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் அன்ட்ரே ரஸல் 5 விக் கெட்டுக்களையும் பட் கம்மின்ஸ் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 7 விக் கெட்டுக்களை இழந்து 142 ஓட்டங்களை மட்டுமே பெற, மும்பை இந்தியன்ஸ் அணி 10 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நிதிஷ் ராணா 57 ஓட்டங்களையும் சுப்மான் கில் 33 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். மும்பை இந்தியன்ஸ் அணியின் ராகுல் சஹார் 4 விக்கெட்டுகளையும் ட்ரென்ட் போல்ட் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்திய மும்பை அணியின் ராகுல் சஹார் தெரிவானார்.

# ஐ.பி.எல். 2021 இன்றைய ஆட்டம்!





*ஐ.பி.எல். 2021 தொடரின் இன்றைய போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத், ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் மோதவுள்ளன.*

*சென்னையில் நடைபெறவுள்ள இந்தப் போட்டி இலங்கை நேரப்படி இரவு 7.30க்கு ஆரம்பமாகும்.*

# பென் ஸ்டோக்ஸ் விலகினார்



*தற்போதைய ஐ.பி.எல். தொடரிலிருந்து ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் சகலதுறை வீரரான இங்கிலாந்தின் பென் ஸ்டோக்ஸ் விலகியுள்ளார்.*

*கடந்த 12 ஆம் திகதி நடைபெற்ற பஞ்சாப் கிங்ஸ் அணிக்கெதிரான போட்டியில் களத்தடுப்பில் ஈடுபட்டிருந்தபோது அவருக்கு கையில் காயம் ஏற்பட்டது.*

*அந்தக் காயம் தீவிரமடைந்திருப்பதால் மருத்துவர்களின் அறிவுரைக்கு அமைய அவர் தறபோதைய தொடரிலிருந்து விலகியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.*

*தனது தந்தையின் உடல்நலக் குறைவின் காரணமாக கடந்த தொடரில் ஆறு லீக் போட்டிகளை பென் ஸ்டோக்ஸ் தவறவிட்டிருந்தார் என்பது குறிப்படத்தக்கது.*

*ராஜஸ்தான் அணிக்கு நட்சத்திர வீரரான ஸ்டோக்ஸின் இழப்பு பின்னடைவை ஏற்படுத்தும் அதேவேளை அவருக்குப் பதிலாக டேவிட் மில்லர் அல்லது லியம் லிவிங்டொன் ஆகிய இருவரில் ஒருவர் அணிக்குள் உள்வாங்கப்படுவார் என அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு






# கோணேஸ்வரர் கோயிலில் பங்குனி உத்தரத் தேர்

தெட்சண கைலாயம் திருக்கோணேஸ்வரம் அருள் மிகு மாதுமை அம்பாள் உடனுறை கோணேஸ் வரப் பெருமான் திருக்கோயிலின் வருடாந்த பங்குனி உத்தர பிரம்மோற்சவத்தின் இரதோற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு இடம் பெற்றது.

இதன்போது இடம் பெற்ற மாணவிகளின் நடன நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

# புத்தாண்டை முன்னிட்டு அம்பாறைக்கு 52 கோடி 50 லட்சம் ரூபா விநியோகம்

புத்தாண்டை முன்னிட்டு அரசாங்கத்தினால் பின்தங்கிய குடும்பங்களுக்கு தலா 5,000 ரூபா விசேட நிவாரண கொடுப்பனவு வழங்கும் வேலைத்திட்டம் நாடாளவிய ரீதியாக தற்போது இடம்பெற்று வருகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் சிங்கள - தமிழ் புதுவருடத்தை கொண்டாடும் மக்களுக்கும் புனித ரமழான் நோன்பை எதிர்கொண்டுள்ள முஸ்லிம் மக்களுக்கும் இந்த 5,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றன.


மருதமுனை - நற்பிட்டிமுனை மக்களுக்கு 5000 ரூபா கொடுப்பனவு வழங்கி வைக்கும் நிகழ்வு வங்கி முகாமையாளர் சட்டத்தரணி எம்.எம்.முபீன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் மாவட்ட சமூர்த்தி பதில் பணிப்பாளருமான வி. ஜெகதீசன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கொடுப்பனவுகளை வழங்கிவைத்தார்.

அம்பாறை மாவட்டத்தில் 52 கோடி 50 லட்சம் ரூபா நிதி பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. கடந்த மூன்று தினங்களாக 12 கோடி 10 லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் சமூர்த்தி உதவிபெறும் 89,000 பயனாளிகளும் குறைந்த வருமானம் பெறும் 20,000 பயனாளிகளும் உள்ளனர். ஐயாயிரம் ரூபாவைப் பெறும் குடும்பங்கள் அதனைப் பயனுள்ள விதத்தில் பெறுமதியாக செலவு செய்ய வேண்டும் என்று இங்கு உரையாற்றிய மேலதிக மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர் ஜெ.லியாகத் அலி, சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ், சமூர்த்தி திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திருமலை காளி கோயிலில் சிறப்புப் பூசை வழிபாடுகள்



தமிழ், சிங்கள சித்திரைப் புத்தாண்டு சிறப்பு பூசை நிகழ்வுகள் திருகோணமலை பத்திரகாளி அம்பாள் கோயிலில் இன்று காலை இடம் பெற்றது.

பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் பிரதம குரு வேதாகமமாமணி பிரம்ம ஸ்ரீ சோ. இரவிச்சந்திரக்குருக்கள் பக்தர்களுக்கு நல்லாசி வழங்கினார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org